**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 18.05.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **18.05.2018** இராசிபுரம் நகராட்சி

**பொருள்கள்**

(1) இந்நகராட்சிப் பகுதிகளிலிருந்து பெறப்படும் குப்பைகளில் மக்கும் குப்பைகளை மக்க வைத்து உரமாக தயார் செய்ய தூய்மை பாரத திட்டத்தில் மைக்ரோ கம்போஸ்ட் சென்டர் (Micro compost centre) அமைக்க 11.05.2018–ந் தேதிய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மைக்ரோ கம்போஸ்ட் சென்டர் அமைக்கப்படவுள்ள இடம் மற்றும் மதிப்பீடு கீழ்கண்டவாறு.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1) | நகராட்சி தட்டான்குட்டை உரக்கிடங்கில் மைக்ரோ கம்போஸ்ட் சென்டர் அமைத்தல் | `. 8.00 இலட்சம் |
| 2) | நகராட்சி தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு காலனியில் மைக்ரோ கம்போஸ்ட் சென்டர் அமைத்தல் (Ward-C, Block-1, TS No.16/1A1A) | `. 17.00 இலட்சம் |
| | **மொத்தம் :** | **`. 25.00 இலட்சம்** |

மேற்படி விவரப்படிக்கான பணிகளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. திட்ட மதிப்பீட்டுத் தொகை `. 25.00 இலட்சத்தை அரசிடம் முழு மான்யமாக கோரிப் பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1042/18)

**தீர்மானம் எண். 302**

அனுமதிக்கப்பட்டது

(2) நகராட்சிப் பகுதிகளில் வசிக்கும் பொது மக்களிடமிருந்து தினசரி பெறப்படும் குப்பைகளை நகராட்சிக்குச் சொந்தமான தட்டான்குட்டைப் பகுதியில் (Ward-C, Block-23 உள்ள TS No. 76. 78.79)**3.63** ஏக்கர் பரப்பளவு கொண்ட உரக்கிடங்கில் குவித்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி குவித்து வைக்கப்பட்டுள்ள குப்பைகளை Bio mining மூலமாக அகற்ற மதிப்பீடு தயார் செய்து கருத்துரு அனுப்ப ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து, மேற்படி உரக்கிடங்கில் குவித்து வைக்கப்பட்டுள்ள **41000** $m^3$ பரப்பிலுள்ள குப்பைகளை Bio mining மூலமாக அகற்ற தயார் செய்யப்பட்ட **`. 265.00** லட்சம் மதிப்பீட்டிற்கும், மேற்படி திட்ட மதிப்பீட்டுத் தொகையை தூய்மை பாரதம் திட்டத்தில் முழு மான்யமாக வழங்க கோரி கருத்துரு அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். **(இ1/1054/18)**

**தீர்மானம் எண். 303**

அனுமதிக்கப்பட்டது

**( 3 )** இந்நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் **2018–19**–இல் பழுதடைந்த சாலைகளை புதுப்பிக்க முன்மொழிவு அனுப்ப கோரப்பட்டதில் எல்லப்பா தெரு எண்.2–இல் ஆரம்பித்து ஹவுசிங்போர்டு சாலை வழியாக காந்தி சாலை, சின்னகடைவீதி, தேரடிதெரு வரை பழுதடைந்த சாலைக்கு புதியாக தார் சாலை அமைத்தும் தேவைப்படும் இடங்களில் சிறுபாலங்கள் அமைக்க தயாரிக்கப்பட்ட **`. 3.00** கோடி மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/987/18)**

**தீர்மானம் எண். 304**

அனுமதிக்கப்பட்டது

**( 4 )** இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் இணைப்புகள் பெறப்படாத குடியிருப்புதாரர்கள் குடிநீர் இணைப்புகள் பெற்றுக் கொள்ள அறிவிப்புகள் (Notice) மற்றும் விளம்பரப் பலகை (Flex Board) இரண்டு இடங்களில் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் **`. 8500/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ2/541/18)**

**தீர்மானம் எண். 305**

அனுமதிக்கப்பட்டது

**( 5 )** தூய்மை பாரதம் திட்டத்தில் இந்நகராட்சிக்குச் சொந்தமான தட்டான்குட்டை உரக்கிடங்கில் **`. 172.00** இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் துவங்கி நடைபெற்று வருகிறது. மேற்படி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை அகற்றினால் மட்டுமே பணிகளை தொடர்ந்து செய்ய இயலும் என்பதால் குப்பைகளை அகற்ற மதிப்பீடு **`. 17.50** லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : **1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/848/18)**

**தீர்மானம் எண். 306**

அனுமதிக்கப்பட்டது

(6) இந்நகராட்சிப் பகுதிகளில் வீடுகள் தோறும் தினமும் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிக்க ஏதுவாக (onsite compost center) நகரின் முக்கிய 5 இடங்களில் (5x3=15 தொட்டிகள்) கட்ட ஆகும் உத்தேச செலவினம் `. 5.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/847/18)

**தீர்மானம் எண். 307**

அனுமதிக்கப்பட்டது

(7) இந்நகராட்சி புதிய பேருந்து நிலையத்திலுள்ளகட்டணக் கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளதால் அதனை பராமரிக்கவும் இயலாத காரணத்தால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 7616/18/பி3 நாள் 26.4.2018–இல் தெரிவித்துள்ளபடி மேற்படி கட்டணக் கழிப்பிடத்தை முற்றிலுமாக இடித்து அப்புறப்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி இடிக்கப்படும் கட்டணக் கழிப்பிடத்தை நகராட்சி நிரந்தர சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/969/18)

**தீர்மானம் எண். 308**

அனுமதிக்கப்பட்டது

(8) இராசிபுரம் நகராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்த திரு எம். சிங்காரவேல் அவர்கள் 28.2.18–இல் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றது. மேற்படி அன்னாருக்கு சிறப்பு சேமநல நிதி நிர்வாக பங்குத் தொகை `. 10000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/965/18)

**தீர்மானம் எண். 309**

அனுமதிக்கப்பட்டது

(9) இந்நகராட்சிக்குட்பட்ட கவரைத் தெரு மற்றும் பெரிய கடைவீதி வழியாக திருத்தேரோட்டம் நடைபெறுவதால் குண்டும் குழியுமாக உள்ள சாலைகளுக்கு சிமெண்ட் ஒட்டுப் பணிகள் செய்ய `. 5.00 லட்ச மதிப்பீட்டிற்கு 11.5.2018–ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு (` . லட்சத்தில்) | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | `. 5.00 | 0.01 % | – |
| 2 | திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், கவுண்டம்பாளையம் | | – | 0.09 % |

பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக அளித்துள்ள வ.எண். 1– இல் உள்ள திரு ஆர். மாணிக்கம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/855/18)

**தீர்மானம் எண். 310**

அனுமதிக்கப்பட்டது

(10) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலிருந்து பெறப்படும் மக்கும் குப்பைகளில் உரம் தயாரிக்க ஏதுவாக மைக்ரோ கம்போஸ்ட் சென்டர் `. 5.20 லட்சத்தில் கட்டும் பணி மேற்கொள்ள 11.5.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு (`. லட்சத்தில்) | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரர், தட்டான்குட்டை ரோடு, இராசிபுரம் | `. 5.20 | 0.05 % | – |
| 2 | திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், கவுண்டம்பாளையம் | | – | 0.95 % |

பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.05 % குறைவாக அளித்துள்ள திரு ஆர். மாணிக்கம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/847/18)

**தீர்மானம் எண். 311**

அனுமதிக்கப்பட்டது

ஒம்/– ப. கிருஷ்ணமூர்த்தி,
தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.